வளன்ஆயம்
நொடிதோறும் புதுமைசேர்
தமிழாய்வுத்துறை
தூய வளனார் கல்லூரி [தன்னாட்சி]
திருச்சிராப்பள்ளி- 620002

## சங்ககால சமுதாயத்தில் பெண்ணின் மன உணர்வுகள்

**முனைவர் சி. இரகு**, உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை, இலயோலா கல்லூரி, வேட்டவலம்.

மின்னஞ்சல் முகவரி - cragu.tamil@gmail.com

**ஆய்வுச் சுருக்கம்**

சங்ககால சமுதாயத்தில் பெண்ணின் மன உணர்வுகள் என்னும் பொருண்மையில் அமைந்த இக்கட்டுரை இலக்கியங்களில் பெண்களின் மன உணர்வுகளை பாதிக்கக்கூடிய வகையில் சமூக செயல்கள் ஒவ்வொன்றும் இன்றும் தொடர்ந்து பின்பற்றி வருவதால் அவர்களின் மனநிலையை புரிந்துகொள்ள இயலாதவர்களாக இருக்கின்றோம். சங்ககாலத்தில் பெண்கள் வீரம் மிகுந்தவர்களாக இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன. புலியை முறத்தால் அடித்து துறத்திய வீரமகளிர் வாழ்ந்த காலத்தில் பெண்கள் தங்கள் உரிமைக்குரல் கொடுக்க இயலாத நிலைக்கு ஒடுக்கப்பட்டு அவர்களின் மன உணர்வுகளை சீர்குலைக்கும் விதமாக சமூக செயல்பாடுகள் நடந்துள்ளதை இலக்கியங்களில் காண்கிறோம். பெண்களுக்கு எதிரான முரண்பட்ட சமூக நிகழ்வுகளை எடுத்துரைக்கும் விதமாக இக்கட்டுரையானது அமைந்துள்ளது.

**கலைச்சொல்லாக்கம்:**

சமூகம் - மக்கள் கூட்டம் - சமுதாயம் - சமூகங்கள் நிறைந்தது - கலம்தொடாமல் – பண்டம் நிறைந்ததை தொடாமல் - தொடி களைதல் - வளையல் அகற்றுதல் - கைவளை – வளையல்.

**முன்னுரை**

ஒவ்வொரு மனிதனும் தனக்கென ஒரு நெறிமுறைகளை வகுத்துக்கொண்டு வாழ்கின்றான். அந்த நெறிமுறைகள் ஒவ்வொன்றும் தனிமனிதனுக்கும் சமூகத்தில் உள்ள மற்ற மனிதனுக்கும் உட்பட்டதாகவே அமைகின்றது. இந்த நெறிமுறைகள் மனிதனுக்கும் சமூகத்திற்கும் இடையில் எண்ணற்ற ஏற்றத்தாழ்வுகளுக்கு வழிவகைச்

செய்கின்றது. இந்த ஏற்றத்தாழ்வுகள், ஒரு குழப்பமான சூழலுக்கு வித்திடுகின்றது. இந்த குழப்பமான சூழல் தான் தனிமனிதனை வேறுபடுத்தி அடையாளம் காணவைக்கின்றது. இந்த அடையாளம் சமூகத்தில் தான் எத்தகைய நிலையில் இருக்கின்றோம் என்பதை அறியவைக்கின்ற நோக்கத்தை ஏற்படுத்துகின்றது.

காலத்திற்கு ஏற்ப சமூகத்தில் கொண்டு வரப்படும் கட்டுப்பாடுகள் என்று சொல்லி தனிமனிதனையோ, ஒரு குழுவையோ ஒதுக்கி வைக்கும் பொழுது முரண்பாடுகள் உருவாகின்றன. இம்முரண்பாடுகள் சங்ககால சமுதாயத்தில் வாழ்ந்த பெண்களுக்கு மனதளவில் மிகபெரிய பாதிப்புக்களை ஏற்படுத்தியுள்ளன. அப்பாதிப்புகள் இன்றளவும் தொடர்ந்து வருவதைக் இக்கட்டுரையானது ஆராய்கின்றது.

**சமூகம் - வரையறை**

சமூகம் என்பது **“ஒரு வரையறுத்த தொடர்ச்சியான வாழ்க்கை முறை அல்லது ஒத்த பயன்பாட்டைப் பெற்ற, தமக்குள் ஒற்றுமையுடையவராக வாழும் மக்களைக் கொண்டது”**[1] (பாலசுப்பிரமணியன்,கு.வெ.,சங்க இலக்கியத்தில் சமூக அமைப்புகள் (மேற்கோள்), தமிழ்ப்பல்கலைக்கழகம், தஞ்சாவூர், முதல்பதிப்பு 1994,ப.2.) மேலும் உலகத்தில் **“தனிமனிதனாக இருக்கும் ஒருவன் சமுதாயப் பழக்க வழக்களை ஏற்றுக்கொள்ளும் போது அம்மனிதர்களின் கூட்டுத்தொகுப்பே சமூகம்.”**[2] (ஆ.ஜெகதீசன், இலக்கியத்தில் மனித உரிமைக் கோட்பாடுகள், தாமரை பப்ளிகேஷன்ஸ், சென்னை, முதற்பதிப்பு,2003,ப.14) **என்று அழைக்கப்படுகிறது.** தனிமனிதன் கூட்டாக சேர்ந்து வாழ்கின்ற மனித தொகுப்பே சமூகம் என்பர். இவற்றில் **“சமூகம் என்பது ஒரு குறிப்பிட்ட நிலப்பகுதியில் நீண்ட காலமாக ஒன்று சேர்ந்து வாழ்வதற்காக மக்கட் கூட்டம் ஏற்படுத்திக் கொள்ளும் அமைப்பாகும்”**[3] (கலைக்களஞ்சியம்- தொகுதி -4, தமிழ்வளர்ச்சிக் கழகம், சென்னை, முதற்பதிப்பு, 1956, ப.477)தனிமனிதனின் **“இன்பம், துன்பம் ஆகிய உணர்வுகளை ஒருவருக்கொருவர் பகிர்ந்து கொண்டு, சேர்ந்து வாழும் மக்கள் குழு சமூகம் எனப்படும்”**[4] (சமூகவியல்,தமிழ்நாட்டுப் பாடநூல் கழகம், சென்னை, மறுபதிப்பு,2011,ப.2) என்று சமூகத்திற்கு வரையறை தந்துள்ளனர்.

சமூகத்தின் தோற்றத்தின் அடிப்படையில் சமுதாயம் உருவெடுத்திருக்கின்றது. **“மனிதர்கள் எல்லோரும் தங்கள் தேவைகளுக்கு, மற்றவர்களைச் சார்ந்தே இருக்கிறார்கள். சார்ந்தேதான் வாழ்கின்றனர். ஒரு குழுவினர் இன்னொரு குழுவினரைச் சார்ந்து வாழ்கின்றனர். ஒரு சமூகத்தினர் மற்றொரு சமூகத்தினருடன்**

**சேர்ந்து வாழ்கின்றனர். பல சமூகங்கள் ஒன்றோடு ஒன்று சார்ந்தும், சேர்ந்தும் வாழ்வது சமுதாயம் எனப்படும்.”**[5] (தமிழ்நாட்டுப் பாடநூல் கழகம், ப.1)

இச்சமூகம் **“தனிமனிதர் பலரடங்கிய சமுதாயம், சமுதாயம் ஒழுங்குபட இயங்கிக் கொண்டிருப்பதற்குத் துணை செய்யும் அரசாங்கம், இம்மூன்றும் வேறுவேறான கூறுகள் என்றாலும், ஒன்றைவிட்டு மற்றொன்றைப் பிரிக்க முடியாது. தனிமனிதன் இல்லாவிட்டால் சமுதாயமில்லை”**[6] (வெ.சாமிநாதசர்மா, சமுதாயச்சிற்பிகள்,ப.47) என்று தனிமனிதனுக்கும் சமுதாயத்திற்கும் இடையேயுள்ள தொடர்பை வெளிக்காட்டியுள்ளனர்.

**சமுதாயம் விளக்கம்:**

மனிதன் தொடக்கத்தில் தனித்து வாழும் இயல்பு கொண்டவனாகத் திகழ்ந்தான். பின்னர் பாதுகாப்புக் கருதி மனிதர்கள் ஒன்று சேர்ந்து கூட்டம் கூட்டமாக வாழும்முறை தோன்றியபோது ‘**சமுதாயம்**’ என்ற ஒரு நிலை உருவானது.

மனிதன் தனித்து வாழ்ந்த காலகட்டத்தைக் கடந்து பல்வேறு குழுக்களாக வாழ முற்பட்ட நிலையில் சமுதாயம் உருவானது. இந்த**“சமுதாயம் என்ற சொல்லே மிகக் குறுகிய பொருளில் வழங்கப்பட்டது. சிறுசிறு கிராமங்களிலே சிதறுண்டு பரவிக்கிடந்த மக்கட் கூட்டமானது, பொதுசனம் என்னும் தொகுதியுணர்வின்றிக் குழுக்களாக இயங்கின”**[7] (க.கைலாசபதி, சமூகவியலும், இலக்கியமும், குமரன் பதிப்பகம், சென்னை, மறுபதிப்பு,2009.ப.16) என்று கைலாசபதி குறிப்பிடுகின்றார்.

பழந்தமிழர்கள் வாழ்ந்த வாழ்க்கையில் சமுதாயம் என்ற சொல்லிற்கு விளக்கத்தைக் காணமுடிகின்றது. அவற்றில் **“ஒருவனை மற்றவன் உணர்ந்து வாழத்தலைப்பட்ட காலமே நாகரிகக் காலம். அதுவே சமுதாயம் மண்ணில் காலூன்றத் தொடங்கிய காலம். ஒருவரையொருவர் அன்புடன் ஏற்று அரவணைத்துப் பாராட்டியதைப் பார்க்க இயலும். அதே சமயம், முரண்பட்டு நிற்பதையும் உணரமுடிகிறது. இதனால் மனம் பொருந்தி வாழ்வதும், மனம் மாறுபட்டு வாழ்வதும் பண்டைய சமுதாயத்திலிருந்து இன்று வரை இருந்து கொண்டுதான் இருக்கின்றன.”**[8] (கு.தேவிப்பிரியா,புறநானூற்றில் மகட்பாற்காஞ்சி, வெற்றிமங்கை வெளியீட்டகம், சென்னை, முதற்பதிப்பு,-2001,ப.67)

சமுதாயம் எனும் சொல்லிற்கு ஆறு வகையான பொருள்களைத் தமிழ்ப் பேரகராதி கூறுகிறது. “**மக்களின் திரள், பொருளின் திரள், கோயிலின் நிர்வாக அதிகாரிகளின் கூட்டம், பொதுவானது பொதுவாகவேணும் அவரவர்க்குப் பங்கு**

**பிரித்தேனும் அனுபவிக்கப்படும் ஊர்ப் பொதுச்சொத்து, உடன்படிக்கை"**[9] (ஆ. வேலுப்பிள்ளை, தமிழ் லெக்சிகன், தொகுதி,3,ப.1300) என்பனவாகும்.

**சமூகம் என்னும் அமைப்பின் தோற்றமும் வளர்ச்சியும்**

சமூகம் என்னும் அமைப்பானது மனிதன் உருவான காலத்திலிருந்து காலவளர்ச்சிக்கு ஏற்றவாறு படிப்படியாக வளரத்தொடங்கியது. ஆதி மனிதன் உருவான காலத்தில் கூட்டம் கூட்டமாய் வாழ்ந்தான். உணவுத்தேவையைக் கருத்தில் கொண்டு நாடோடி வாழ்க்கையை வாழ்ந்திருக்கின்றான். ஆதி மனிதன் கூட்டமாக வாழ முற்பட்டபோது சமூகம் என்னும் அமைப்பினை உருவாக்குவதற்கு அடித்தளமாய் அமைந்திருக்கின்றான்.

சமூக அமைப்பு வளரத்தொடங்கிய காலத்திலிருந்து உலகத்தில் தற்போது வரை ஐந்து விதமான அமைப்புகளைக் கொண்டிருக்கின்றது என்று மார்க்சியம் குறிப்பிடுகின்றது. அவற்றில்

1. ஆதிப் பொதுவுடமைச் சமுதாயம்
2. அடிமைச் சமுதாயம்
3. நிலவுடமைச் சமுதாயம்
4. முதலாளித்துவ சமுதாயம்
5. சமத்துவ சமுதாயம்.

இச்சமுதாய அமைப்பில் முதல் மூன்று சமுதாய அமைப்புகளுக்கும் பழந்தமிழ் இலக்கிய பாடல்களில் பதிவுகள் உள்ளன. பின்னர் இரண்டு சமூக அமைப்பில் காலத்தில் வளர்ச்சி நிலைகளில் தோன்றிய சமூக அமைப்பாகக் கருதப்படுகின்றது.

**ஆதிப் பொதுவுடமைச் சமுதாயம்**

உலகில் மனிதன் நாடோடி வாழ்க்கை வாழ்ந்த காலம் என்பதால், இச்சமுதாய காலத்தில் நாடுகள், நகரங்கள், ஊர்கள், வீதிகள், வீடுகள் என்று ஏதும் தோன்றவில்லை. தனிச்சொத்து, குடும்பம், அரசு என்று ஏதும் உருவாகவில்லை. கொடிய மிருகங்களால் மனிதர்களின் உயிருக்கு தீங்கு நேரிடும் என்பதால் யாரும் தனித்து வாழவில்லை. மாறாக மனிதர்கள் மிருகங்களைப் போல் காடுகளில் கூட்டமாய் வாழ்ந்துள்ளனர். **"இக்காலத்தில் மக்கள் குறிஞ்சி, முல்லை நிலங்களில் வேட்டையாடியும் நிரை மேய்த்தும் ஆதி பொதுவுடைமைச் சமூகமாக இனக்குழுவாக**

**வாழ்ந்தனர். அக்காலகட்டத்தில் அம்மக்களிடையே உணவுக்காகவும் கால்நடைகளுக்காகவும் அடிக்கடி போர்கள் நிகழ்ந்துள்ளன. இப்போர்களை பழந்தமிழ் இலக்கியங்கள், இலக்கண நூல்கள் வெட்சி, கரந்தை என்னும் பெயர்களால் குறிப்பிடுகின்றன."**[10] (வெ.பெருமாள்சாமி, சங்க இலக்கியக்காட்சிகள் மார்க்கசிய வெளிச்சத்தில்,பாரதி புத்தகாலயம்,முதற்பதிப்பு,2010, ப.13)

ஆதிமனிதன் கருவிகள் பயன்படுத்திய போது அவற்றில் ஆயுதங்கள் பெரும்பாலும் கற்களால் ஆன கருவிகளாகவே இருந்திருக்கின்றது. இந்த நிலையில் யாரும் தனித்துவாழ முடியாது. தனித்து உணவு தேடவும் முடியாது. இம்முயற்சிகளில் ஈடுபடுவது தவிர்க்க முடியாதது. **"ஒரு கூட்டத்தைச் சேர்ந்த அனைவரும் கூட்டாக வேட்டையில் ஈடுபட்டனர். வேட்டையாடி கிடைத்த மாமிசத்தையும் கூட்டாகவே பகிர்ந்துண்டனர். இதுதான் இச்சமுதாயத்தின் உற்பத்தி வினியோக முறையாக இருந்திருக்கின்றது. இதனாலே இதற்கு ஆதிப் பொதுவுடமைச் சமுதாயம் எனும் பெயர் வந்திருக்கின்றது என விளக்குகின்றனர்"**[11] (பி.ஆர்.பரமேஸ்வரன், மார்க்சியத் தத்துவம் - ப.33)

இச்சமுதாயத்தில் திருமண முறையோ, குடும்பமுறையோ இல்லை கூட்டம் முழுவதும் கூட்டத் தலைவி - தாய் - வழியாகவே அறியப்பட்டது. அதனால்தான் இது **'தாய்வழிச் சமுதாயம்'** என்றும் கூறப்படுகிறது. கூட்டு உழைப்பின்போது எழுப்பிய ஓசையே - பிறகு மொழியாகப் பரிணமித்தது.

இச்சமுதாயத்தின் இறுதிக் கூட்டமே இனக்குழு மக்கள் சமுதாயம் ஆகும். கால்நடைகளைக் கொன்று தின்ற நிலையிலிருந்து, அவற்றை வளர்க்கும் நிலைக்கு வந்தனர். உணவு சேகரிக்கும் நிலையிலிருந்து, உணவு பயிரிடும் நிலைக்கு வளர்ச்சியடைந்தனர். கல், வில், அம்புக்குப் பதிலாக கத்தியும், கூர்வாளும், கோடரியும் பயன்படுத்தியிருக்கின்றனர். கோடாரி வரலாற்றில் ஏற்படுத்திய மாறுதல் மகத்தானது' என்கிறார் ஏங்கல்ஸ். புதிய உற்பத்திக்கருவிகள் வரவே, விவசாயம் வளரத் தொடங்கியது. குழந்தை வளர்ப்பு வீட்டுப் பராமரிப்பு பெண்களின் பொறுப்பானது. சமுதாய உழைப்பிலிருந்து பெண் அகற்றப்பட்டாள்.

'**மனித குல வரலாற்றில் நிகழ்ந்த முதல் வேற்றுமை கருவிகள் உள்ளவர் இல்லாதவர் என்பதேயாகும். முதல் அடிமைத்தனம் - ஆணுக்குப் பெண் அடிமைப்பட்டதே'** குடும்பமும், தனிச்சொத்தும் இவ்வாறே தோன்றின என்கிறார் ஏங்கல்ஸ். இக்காலத்தில் வாழ்ந்த மனிதக் கூட்டம் பொதுவுடமையாக வாழ்ந்திருக்கின்றனர். பின்னர் தோன்றிய சமூக அமைப்புகள் ஒவ்வொன்றும்

மாறுபட்டும், மாறுபட்ட கருத்துக்களோடும் வாழ்ந்திருக்கின்றதை எட்டுத்தொகை பாடல்களில் புலனாகின்றது.

**பெண்ணின் சிறுகுற்றத்திற்கு பெரும் தண்டணை**

சிறுகுற்றத்திற்காக பெரும் தண்டனை கொடுத்து வாழ்ந்த சமூகத்தில் மக்களின் மனநிலையில் மனச்சிதைவு ஏற்பட்டு பெரும் போராட்டத்தினை சந்தித்து வாழ வேண்டிய சூழலுக்குத் தள்ளபட்டுள்ளனர். அகபாடல்களை புனையும் பொழுது புலவர்கள் சமூகத்தில் நடந்த புறமுரண்பாடுகளையும் இணைத்து உதாரணமாகக் காட்டியிருக்கின்றனர். இதனை,

**“மண்ணிய சென்ற ஒண்ணுதலரிவை**
**புனல்தரு பசுங்காய் தின்றதன் தப்பதற்கு**
**ஒன்பதிற்றொன் பதுகளிற்றொடு அவள்நிறை**
**பொன்செய் பாவை கொடுப்பவும் கொள்ளான்**
**பெண்கொலை புரிந்த நன்னன்”**[12] **(குறுந்.*292:1-5*)**

இப்பாடலில் காணமுடிகின்றது. இப்பாடலில் தலைவியும் தோழியும் உரையாடிக் கொண்டிருக்கின்றனர். அப்பொழுது உரையாடிய நிகழ்வின் முன்னர் நிகழ்ந்த நிகழ்வுகளை ஒருவருக்கொருவர் எடுத்துரைப்பதில் இருந்து சமுதாய முரண்பாடுகளை அறியமுடிகின்றது. அப்பொழுது “நன்னன் என்னும் மன்னன் அமைந்த காவல்காட்டில் மா மரம் ஒன்று இருந்தது. அம்மாமரமானது காவிரிக்கு மிக அருகாமையில் இருந்தது. அம்மரத்திலிருந்து விழுந்த காய் தண்ணீரில் மிதந்து வந்தபோது அக்காவிரியாற்றில் குளித்துக்கொண்டிருந்த பெண்ணொருத்தி எடுத்து உண்டு விட்டாள். இதற்காக நன்னன் அந்தப் பெண்ணுக்கு கொடுத்த தண்டனை மரணதண்டனையாகும். இந்த தண்டணையை மாற்றுவதற்காகப் பெண்ணின் தந்தை 9 x 9= 81 களிற்று யானைகளைத் தருவதற்கும் தண்டணைக்கு உள்ளான பெண்ணின் எடைக்கு எடை தங்கத்தில் ஆன அவள் உருவச்சிலையைத் தருவதற்கும் உடன்பட்டபோதும் கூட அதனைப் பெற்றுக்கொள்ளாமல் நன்னன் மரண தண்டனையை நிறைவேற்றுகின்றான்.”[13] (அ.குழந்தைசாமி (பதி.), மனிதஉரிமைகளும் தமிழ் இலக்கியமும், தூயவளனார் தன்னாட்சிக் கல்லூரி, திருச்சி, மறுபதிப்பு,2011,ப.32)

**பெண்கள் தங்கள் சுயஉரிமையை இழத்தல் :**

பெண்கள் தங்களுளக்கான சுய உரிமையை இழந்து ஆண்களுக்கு அடிமையாகவே வாழ்ந்து வந்துள்ளனர். ஆண்கள் தங்களின் மனைவியை இழந்தால் மறுமணம் செய்து கொள்ளும் உரிமை இருந்திருக்கிறது. ஆனால்

பெண்களுக்கு அந்த உரிமையை அன்றைய சமூகம் வழங்கவில்லை. மாறாக கைம்மை பெண்களை கோயில் பணிக்காவும், பாலியல் உறவுகளுக்காகவும், இன்னும் பல்வேறு காரணங்களுக்காகவும் பயன்படுத்தியுள்ளனர். இந்நிகழ்வு பெண்களின் மன உணர்வுகளை பாதித்துள்ளன. தங்களுக்கான சுய உரிமை சுய சிந்தனைகள வளரவிடாமல் தடை செய்துள்ளனர் என்பது புலனாகின்றது.

சமூகம் இந்த கைம்மை பெண்களுக்கு பல உரிமைகளையும், சுதந்திரத்தினையும் பறித்துக் கொண்டுவிட்டது. கணவனோடு வாழ்க்கை நடத்தும் போது எவையெல்லாம் முக்கியமாகப் பட்டதோ அவை எல்லாம் கணவனின் இறப்பிற்குப் பிறகு அனைத்தும் மறுக்கப்படுகின்றது. இந்த நிகழ்வுகள் ஒவ்வொன்றையும் அகப்பாடல்கள், புறப்பாடல்கள் புலப்படுத்துகின்றன.

1.கலந்தொடாமலிருத்தல்,

2.தொடி நீக்குதல்,

3.கூந்தலை களைதல்,

4. பச்சைக்கீரையை உணவாக உண்ணுதல்,

5.பாயின்றி உறங்குதல்

இந்நிகழ்வுகள் எல்லாம் சமூக பழக்க வழக்கம் என்று சொல்லி பெண்களை தனிமைப்படுத்தியுள்ளனர்.

**கலந்தொடா மகளிர்**

பெண்கள் பூப்புற்றிருக்கும் காலங்களில் வீட்டுப் பண்டங்களைத் தொடாமல் ஒதுங்கி வாழ்ந்தமையால் அவர்கள் கலந்தொடா மகளிர் எனப்பட்டனர். பெண்கள் பூப்புற்றிருக்கும் காலங்களிலும் குழந்தைபெற்ற காலத்திலும் தூய்மையற்றவர்களாகக் கருதி விலக்கும் நிலை அனைத்துப் பண்டைத் தமிழர்களிடமும் நிலவியதனைப் பழந்தமிழ் இலக்கியச் சான்றுகள் குறித்துள்ளன. பெண்கள் பூப்படையும் நிலை பருவமுதிர்ச்சியின் அறிகுறியாகும். அந்நிலையில் அவர்கள் தீண்டத் தகாதவர்களாகக் கருதப்படுகின்றனர். இவ்வழக்கத்தைப் பழங்குடி மக்கள் பெரும்பாலோரிடையேயும் காணமுடிகின்றது. அவர்கள் பெண் பருவத்திற்கு வந்துவிட்டால் அவளை வீட்டை விட்டு அகற்றித் தனியிடத்தில் குடிலமைத்துத் தங்கச் செய்து துணையாக முதிர்ந்த மகளிரை இருத்தி அவளுக்குத் தேவையானவற்றை அந்தந்த நேரங்களில் கொடுக்கச் செய்து நீராடித் தீட்டுக்கழித்துப் பின்னர் தங்களோடு வாழ அனுமதிதுள்ளனர்.

தலைவியின் பருவமாற்றத்தால் உடலில் ஏற்படும் நிகழ்வுகளை வைத்து இவள் தீயசக்திக்கு ஆட்பட்டவள் என்று அவளை தீண்டத்தகாதவளாகச் சமுதாயத்தில் குறித்துள்ளனர். இதனை,

**“முலைமுகஞ் செய்தன முள்ளெயி றிலங்கின**
**தலைமுடி சான்ற தண்டழை யுடையை**
**யலமர லாயமொ டியாங்கணும் படாஅன்**
**மூப்புடை முதுபதி தாக்கணங் குடைய**
**காப்பும் பூண்டிசிற் கடையும் போகலை**
**பேதை யல்லை மேதையங் குறுமகள்**
**பெதும்பைப் பருவத் தொதுங்கினை.”[14] (அகம். 7:1-7)**

என்று இப்பாடலில் சமுதாயத்தில் இருந்த பெண்கள் மீதான நடவடிக்கைகளைக் குறிப்பிட்டுள்ளார்.

இயற்கையின் கூறுகள் மாதவிலக்காகிய பெண்களால் பாதிக்கப்பட்டமையினை, மாதவிலக்குக் கொண்ட பெண் ஒருத்தி இனிய பழந்தரும் மரத்தின் அடியில் நின்றால் அம்மரத்தின் பழத்தினுடைய இனிப்பு கொடிய கசப்பாக மாறிவிடும். அவள் தானியத்தைத் தொட்டால் அத்தானியம் விதைப்பதற்கு உதவாது, அவை முளைக்கும் சக்தியையும் இழந்துவிடும். வளரும் பூச்செடியருகில் சென்றால் அவை சுருங்கி வாடிவதங்கி விடுகின்றன. தோட்டத்துப் பசுதந்தன்மை மாறிவிடுகிறது. ஒரு மரத்தினடியில் அவள் உட்கார்ந்தாள் என்றால் அம்மரத்திலிருந்து பழங்கள் பழுக்காததற்கு முன் தாமாகவே அழுகிக் கீழே விழுந்து விடுகின்றன. அவளுடைய பார்வை மட்டும் முகம் பார்க்கும் கண்ணாடியை அழுக்குப்படிந்த கண்ணாடியேபோல் ஆக்கிவிடுகிறது”. (பிளினி,வி.எஸ்.வி. இராகவன்,ப.155) என்று குறிப்பிட்டுள்ளார். மேலும் **“எறும்பு பாதிக்கப்பட்டமையும் காட்டியுள்ளார். எறும்பு எவ்வளவு சிறிய உயிரினம். அச்சிறிய உயிரினம் கூட மாதவிலக்குள்ள பெண்கள் கைப்பட்ட தினைவகைகளை எடுக்காமல் தன் இருப்பிடத்திற்கே சென்று விடுகின்றன”[15]**(வி.எஸ்.வி. இராகவன்,ப156) என்று தம்முடைய பயணக்குறிப்பில் குறிப்பிட்டுள்ளதைக் காணமுடிகின்றது.

பருவ வயது அடைந்த மகளிர் வாழ்வில் மாதவிலக்கு என்பது இயற்கையோடு தொடர்புடையது. இந்நிகழ்வினை பண்டைய சமூகம் ஏதேதோ காரணம் காட்டி அம்மகளிரையும் சுபநிகழ்விலிருந்து தள்ளி வைத்துள்ளனர். தள்ளிவைத்தது மட்டும் அல்லாமல் சில செயல்களை செய்யவும் தடையாக இருந்திருக்கின்றனர். அச்செயல்களில் பூப்பெய்திய மகளிரை கலத்தினை

தொடக்கூடாது என்ற கட்டுப்பாட்டில் அடக்கி வைத்துள்ளர். இவர்கள் கலத்தினை தொடாமல் இருப்பதினால் கலந்தொடா மகளிர் என்று சித்திரிக்கின்றனர். இதனை

**"அணங்குடை முருகன் கோட்டத்துக்**
**கலந்தொடா மகளிரி னிகழ்ந் துநின் றவ்வே"**[16] (புறம்: 299 .6-7)

இப்பாடலில் அறியமுடிகின்றது. முருகன் கோட்டத்தைக் கலந்தொடா மகளிர் புகாதநிலை குறிப்பிடப்பட்டுள்ளது. இத்தன்மை பண்டைத் தமிழரின் வீட்டுக்கு விலக்காகிய மகளிர் கோயில் செல்வதில்லை என்ற வழக்கத்தினைப் புலப்படுத்தும். புனிதம் கெட்டுவிடும் என்பதாலோ அல்லது தெய்வத்தின் தாக்குதலுக்கு ஆளாவர் என்ற அச்சம் காரணமாகவோ அங்குப் புகாதநிலை வழக்கத்தில் இருந்திருக்கின்றன.

சமூகத்தில் இருந்த கட்டுப்பாடுகளுக்கு அஞ்சி அக்காலத்தில் பெண்கள் பூப்புற்ற நிலையினைச் "செவ்வணி அணிந்து தெரிவித்தமை" என்று குறிப்பிட்டுள்ளனர். இதனை

**"பரத்தையுள் ளதுவே பண்புறு கழறல்**
**தோள் புதி துண்ட பரத்தையிற் சிவப்புற**
**நூளணிந் துவக்குஞ் சுணங்கறை யதுவே."**[17] **(பரி.9.18-20)**

பரிபாடலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**"பெண் தன் உடல் மொழி குறித்து வெளிப்படையாகப் பேசமுடியாமல் மனதிற்குள்ளேயே புதைத்து மன அழுத்தம் ஏற்பட்டு உளவியல் நோய்க்கு ஆளாகி விடுகிறாள்."** (www.keetru.com பார்வை.19.04.2016 ) இதற்கு காரணமாகத் திகழ்வது சமுதாயம் ஆகும். தனியொரு நபரையும் மக்கள் நிறைந்த கூட்டத்தினையும் வழிநடத்த வேண்டிய சமூதாயம் அவர்களுக்கு மனஅழுத்தையே கொடுக்கின்றது. இந்த மனஅழுத்தம் பல்வேறான தீய செயல்களுக்கு அடித்தளமாக அமைகின்றது.

**தொடி கழிதல்**

தொடி என்னும் சொல்லாட்சியை ஆராய்கின்ற பொழுது **"தொடி என்பதற்கு தமிழ் அகராதிகள் கைவளை என்று பொருள்தருகின்றது"**[18] (ந.கதிரைவேற்பிள்ளை, தமிழ் மொழி அகராதி,ப.857) கழிதல் என்பதற்கு நீக்குதல் என்று பொருள் கொள்ளப்படுகின்றது. தொடி கழிதல் என்பதற்கு கையில் உள்ள வளையல்களை நீக்குதலாகும். பருவ வயது அடைந்த பெண்களுக்கு அழகு சாதனப்பொருட்களில் ஒன்றாகத் திகழ்வது கைவளையல்கள் ஆகும்.

பெண்கள் திருமணம் ஆன பிறகு கணவன் போரின் மூலமாகவோ, விபத்தின் காரணமாகவோ அல்லது ஏதாவது ஒரு சூழ்நிலையில் இறக்க நேரிட்டால் முதலில் தங்கள் கையில் இருக்கக் கூடிய கைவளையல்களை நீக்குதல் வேண்டும். இந்நிகழ்வின் மூலம் கணவனை இழந்த பெண்கள் அணிகலன்களும், ஆபரணங்களும் அணியும் உரிமை மறுக்கப்பட்டனர். **“இலக்கியங்கள் கைம்பெண்களை தொடிகழி மகளிர் என்றும் கழிகல மகளிர்”**[19] (வெ. பெருமாள் சாமி, சங்க இலக்கியக் காட்சிகள்,ப.61) என்று காலந்தோறும் வழங்கி வருகின்றதை அறிந்துகொள்ள முடிகின்றது.

சோறு நிறைந்திருக்கும் பானையிலிருந்து , சோறு இல்லாமல் வெளியே தூக்கி எரிந்தால் அப்பானையானது வெறுமனமே காட்சியளிக்கும், அதுபோல இல்லறத்தோடு வாழ்ந்த பெண்களின் நிலையை சித்திரிக்கின்றார்.

கணவன் இறப்பிற்குப் பிறகு அக்குடும்ப உறவுகள் அப்பெண்ணை பல்வேறு கொடுமைகளுக்கு ஆளாக்குகின்றனர். அப்பெண்ணின் அன்றாட உரிமைகளையும் இழக்கும் நிலையையும் தெளிவாக காட்டியிருக்கின்றார். கணவனை இழந்த பெண்ணுக்கு முதலில் பறிக்கப்படுவது அவளது தொடி கழிதல் ஆகும். இந்த தொடி கழியும் நிகழ்வில் தொடி களையும் பொழுது அத்தொடிகள் வாழைப் பூவானது சிதறிகிடந்தால் எப்படி காட்சியளிக்குமோ அதுபோல அத்தொடிகள் சிதறிகிடக்கும் நிலையை வெளிப்படுத்தியிருக்கிறார். இதனை,

**“அட்ட குழிசி யழற்பயந் தா அங்கு**

---------------------------------------------------

--------------------------------------------------

**ஊழி னுருப்ப வெருக்கிய மகளிர்**

**வாழைப் பூவின் வளைமுறி சிதற.”**[20] **(புறம்.237)**

இப்பாடலில் அறியமுடிகின்றது. மேலும் தொடி கழிதல் நிகழ்வினைப் பற்றி காட்சிபடுத்தும் பொழுது, பெணகள் தங்களுடைய தொன்மையான அழகையெல்லாம் இழந்து தவிக்கும் நிலையை காணமுடிகின்றது. பாட்டு இசைக்கும் குழுவினர் தங்களுக்கு இடர் ஏற்பட்டால் அவர்களின் குடும்பம் பாதிக்கப்படுவது போல கணவனை இழந்த பெண்களின் இல்லம் பொழிவிழந்திருந்தைக் குறிப்பிடுகின்றார். இதனை

**“தொடி கழி மகளிரிற் றொல்கவின் வாடிப்**

**பாடுநர் கடும்பும் பையென் றனவே”**[21] **(புறம்.238)**

என்று இப்பாடல் உணர்த்துகின்றது.

**கூந்தல் களைதல்**

கணவனை இழந்த பெண்களுக்கு தொடிகழிதல் நிகழ்வோடு மட்டும் விட்டுவைக்கவில்லை. அப்பெண்களை பல்வவேறு சித்திரவதைகளுக்கு ஆளாகியிருக்கின்றனர். இச்சமூகம் பெண்களுக்கு பல்வேறு சடங்கு, பழக்கவழக்கம் என்று சொல்லி பெண்களுக்கு எதிராகச் செயல்பட்டு வந்திருக்கின்றது. அவற்றில் தொடிகழிதல் நிகழ்விற்குப் பிறகு கூந்தல் களைதல் (மொட்டையடித்தல்) ஆகும்.

தாயங்கண்ணியார் என்னும் புலவர் வாழந்த காலத்திற்கும் முன்பாக வாழந்த பெண்களுக்கு நிகழ்ந்த கொடுமைகளை இவ்வுலகிற்கு எடுத்துச் சொல்லும் விதமாக பாடலை புனைந்திருக்கிறார்.

கூந்தல் களையும நிகழ்வினை புனையும் பொழுது அப்பெண்ணின் நிலைமையிலிருந்து அவருடைய மன வேதனையும், மனதிற்குள் அடக்கி வைக்கப்பட்ட மனக்குமறலையும் வெளிப்படையாக காட்சிபடுத்துகிறார். முற்காலத்தில் கணவனை இழந்த பெண்களின் கூந்தலைக் கொய்துள்ளனர் என்பதனை **"கூந்தல் கொய்து குறுந்தொடி நீக்கி"** உள்ளனர்.

கூந்தல் களையும் நிகழ்வானது முற்காலத்திலிருந்தே தொடர்ந்து வருகின்ற நிகழ்வாக அமைந்திருக்கின்றது.

பகைவருடைய மகளிர் கூந்தலை களைந்து பெண்களின் கைம்மை வாழ்க்கைக்கு காரணமாகத் திகழ்ந்திருக்கின்றான். தோல்வியடைந்த பகைவரின் நாட்டு பெண்களின் கூந்தல் கொய்யும் பொழுது அரசனின் வேல் சிதைந்து போனதாகவும் குறிப்பிடுகின்றார். இதனை

**"முலைபொலி யாக முருப்ப நூறி**
**மெய்ம்மறந்து பட்ட வரையாய் பூசல்**
**ஒண்ணுதன் மகளிர் கைம்மை கூர**
**அவிறறல் கடுக்கு மம்மென்**
**குவையிங் கூந்தல் கொய்தல் கண்டே"**[22] **(புறம்.25:10-14,)**

இப்பாடலில் அறியமுடிகின்றது. வேல் சிதைந்து போகும் அளவிற்கு அரசன் அவர்களின் கூந்தலை சிதைந்திருப்பதால் அரசன் என்னும் அதிகாரத்தன்மையை பயன்படுத்தி பெண்களின் இழிநிலைக்குத் தள்ளப்படுவதற்குக் காரணமாக இருந்துள்ளார்.

**இன்னாப் பொழுதில் உண்ணல்**

பண்டைய சமூகத்தில் கணவனை இழந்த பெண்களுக்கு சமூகக் கட்டுப்பாடுகள் என்று சொல்லி பல்வேறு இன்னல்கள் இழைத்துள்ளனர். அவற்றில் ஒரு பெண் தன் கணவனை இழந்து தவிக்கின்றாள். கணவனை இழந்த பெண்ணின் ஏக்கத்தினை,

**"அளியதாமே, சிறு வெள் ஆம்பல்**
**இளையமாகத் தழை ஆயினவே**
**பெருவளக் கொழுநன் மாய்ந்தெனப் பொழுதுமறுத்து**
**தின்னா வைக லுண்ணும்**
**அல்லிப் படுஉம் புல்லா யினவே"**[23] (புறம். 248:3-4)

என்ற பாடலில் அறியமுடிகின்றது. இப்பாடலில் பெண்ணின் மனநிலையிலிருந்து புலவர் குறிப்பிடுகின்றர். 'தழை' என்பது மலரிதழ்களால் நெறித்துக்கட்டி அமைத்த ஒருவகை ஆடையாகும். கணவனை இழந்த பெண் உரைக்கின்ற நிகழ்வில் வெண்மையான ஆம்பல் முன்பு நாம் இளமையுடன் இருக்கும் காலத்தில் தழையாடையாய் இருந்து உதவின. தழையாடையை பற்றி குறிப்பிடுகையில் **"வயன்மலர் ஆம்பற்கு அயிலமை நுடங்குதழை"** என்று குறிப்பிட்டுள்ளது. தழையாடை பற்றி **"கிளையிதழ பறியாப், பைவிரி அல்குல் கொய்தழை தைஇய"**[24] என்று குறிஞ்சிப்பாட்டும் புலப்படுத்துகின்றது.

இப்பொழுது பெரிய செல்வத்தையுடைய கணவன் இறந்தபிறகு அல்லியிடத்தில் இருந்து பெறப்பட்ட புல்லரிசியானது, உண்ணும் வேளை தவறித் துன்பந்தருகின்ற இரவு நேரத்தில் உண்ண வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது என வருந்துகின்றாள். இவ்வரிசி உணவுக்குப் பயன்படுதலை **"அல்லி உணவின்"** (புறம்.250) என்று குறிப்பிட்டுள்ளதை அறியமுடிகின்றது.

சமூகத்தில் கணவனை இழந்த பெண்களுக்கு இழைக்கப்பட்ட அநீதியைக் காணமுடிகின்றது. சமூகம் தனிமனித உணர்வுகளுக்கு உரிமை கொடுக்காமல் சமூகக்கட்டுப்பாட்டுக்குள் அடக்கிவைத்துள்ளது. சமூகம் பெண்ணின் உணர்வுகளை மதிக்காத நிலையைக் காணமுடிகின்றது. கணவனை இழந்த பெண்களின் புலம்பல்கள் தாபதநிலையில் அடக்கிவைத்துள்ளனர்.

**பச்சைக்கீரை உண்ணல்**

கணவன் இழந்த பெண்களை கைம்மை பெண்கள் என்றும், கைம்மை மகளிர் என்றும் குறிப்பிடுவர். இந்த கைம்மை மகளிருக்கு என்று சில கட்டுப்பாடுகள் இருந்திருப்பதை பூதபாண்டியன் மனைவி பெருங்கோப்பெண்டு பாடிய பாடலில் காணமுடிகின்றது. அப்போது கைம்மை மகளிர் உணவாக பச்சைக்கீரையை பயன்படுத்தியுள்ளனர். இந்நிகழ்வினை,

**"அணில்வரிக் கொடுங்காய் வாள்போழ்ந் திட்ட**
**காழ்போ னல்விளர் நறுநெய் தீண்டா**
**தடையிடைக் கிடந்த கைபிழி பிண்டம்**
**வெள்ளெட் சாந்தொடு புளிப்பெய் தட்ட**

**வேளை வெந்தை வல்சியாகப்.”[25] - (புறம். 246 : 3-7)**

இப்பாடல் சுட்டுகின்றது. கணவனை இழந்த பிறகு தீப்பாய புகும் பெருங்கோப்பெண்டு குறிப்பிடுகையில் கைம்மை பெண்ணின் நிலையை குறிப்பிடுகின்றாள். கைமைப் பெண்கள் உணவாக அணிலின் மேலுள்ள வரிபோல் வரியை உடைய வெள்ளரிக்காயை அரிவாளால் அரிந்து இடப்பட்ட விதை, அரிவாளால் அரிந்த விதையானது சிதறிகிடக்கும். சிதறிகிடக்கும் விதை போன்றதும் நல்ல வெண்மையான மணம்மிகுந்த நெய் தீண்டபடாததும், கீரை இடையிடையே பயின்று கையால் பிழிந்து கொள்ளப்பட்டதுமான நீர்ச்சோற்றுத்திரள், அதனுடன் வெண்மையான எள்ளுத்துவையலுடன் புளியுடன் சமைத்த வேளைக்கீரையும் வேகவைத்து உணவாகக் கொண்டு உண்டுள்ளனர். சமூகத்தில் மற்ற பெண்களை விட கைம்பெண்களுக்கு இடப்பட்ட கட்டுப்பாடுகள் சமூக முரண்பாட்டை புலப்படுதியிருக்கின்றன.

**பாயின்றி உறங்குதல்**

சமூகமானது கைம்மை மகளிருக்கு ஒவ்வொன்றாக இன்னல்களைக் கொடுத்திருக்கின்றது. பல்வேறு நிலைகளில் இன்னல்களை அனுபவிக்கின்ற கைம்மை பெண்களுக்கு உணவில் மட்டும் அல்லாது படுத்துறங்கும் நிகழ்விலும் சில கட்டுப்பாடுகள் வைத்திருக்கின்றனர். இதனை

**“பரற்பெய் பள்ளிப் பாயின்று வதியும்**
**உயவற் பெண்டிரே”[26] - (புறம். 246 : 8-9)**

என்று குறிப்பிடுகின்றனர். பன்மை குணங்கண்மேனின்றது கைம்மை மேற்கொண்டொழுகும் மகளிரை உயவற் பெண்டிர் என்று அழைத்துள்ளனர். இம்மளிர் பருக்கைக் கற்கள் அமைந்த படுக்கையில் பாய்யில்லாமல் படுத்துறங்கினர் என்பதை பாடல்கள் புலப்படுத்துகின்றன. இக்கட்டுபாடுகள் அவர்களின் அன்றாட வாழ்க்கை நிகழ்விற்கு மாறனதாகவும், சமூகத்திற்கு அடங்கி பயந்தும் ஏற்றுக்கொள்ளப்பட்டு அதனை பின்பற்றியுள்ளனர்.

**தொகுப்புரை :**

சங்ககாலத்தில் பெண்கள் தங்களுக்கான அடையாளத்தை இழந்து தவித்துள்ளனர். அதற்குச் சான்றாக பல்பேவறு பதிவுகள் பாடல்கள் மூலம் காணப்படுகின்றன. ஒவ்வொரு நிகழ்வுகளும் அவர்களின் உள்ளத்தை பாதித்தும், சுய உரிமைக்கு குரல்கொடுக்க இயலாத நிலையும் காணமுடிகின்றன. சங்ககால சமுதாயத்தில் சங்க மகளிரின் திருமணத்தில் இழை அணிகள் அணியப்பட்டன. கைம்மையில் இழை, வளை, தொடி களையப்பட்டன. கைம்மை வாழ்க்கையில் கூந்தல் களைதலில் மலர் நீக்கம் தானாகவே நடக்கிறது. திருமணத்தில் மங்கல மகளிர் வாழ்த்துகின்றனர். சங்க

காலத்தில் கைம்மை மகளிர் வாழ்த்தியதாகவோ, நிகழ்வுகளில் கலந்து கொண்டதாகவோ செய்திகள் இல்லை. கற்பு வாழ்க்கையில் விருந்தோம்பல் பண்பு சிறப்பாகப் போற்றப்பட்டது. இன்னாப்பொழுதில் பசலைக்கீரை, புல்லரிசி, வெள்ளைச்சாந்து, பழஞ்சோறு உண்பது கைம்மைக்குரியதாக உள்ளது. கைம்மை பெண்களுக்கு என்று விதிக்கப்பட்ட கொடுமைகள் அனைத்தும் சமூகத்தில் முரண்பாட்டிற்கு அடித்தளமாக அமைந்துள்ளது. மேலும் இச்சமூகச் செயல்பாடுகளால் பெண்கள் தங்கள் அடையாளத்தை இழந்து வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். இன்றைய சமூகத்தில் வாழும் பெண்கள் தங்களுடைய எண்ணங்களையும் வெளிப்படுத்தி ஒரு புதிய மாற்றை கொண்டு வலம் வரவேண்டும். சங்ககால பெண்கள் தங்கள் மன உணர்வுகளின் அடிப்படையில் பல்வேறு உளவியல் காரணங்களில் சிக்கித் தவித்துள்ளனர் என்பதை அறியமுடிகின்றன.

**சான்றெண் விளக்கம்**

1. பாலசுப்பிரமணியன்,கு.வெ.,சங்க இலக்கியத்தில் சமூக அமைப்புகள் (மேற்கோள்), தமிழ்ப்பல்கலைக்கழகம், தஞ்சாவூர், முதல்பதிப்பு 1994,ப.2.
2. ஆ.ஜெகதீசன், இலக்கியத்தில் மனித உரிமைக் கோட்பாடுகள், தாமரை பப்ளிகேஷன்ஸ், சென்னை, முதற்பதிப்பு,2003,ப.14
3. கலைக்களஞ்சியம்- தொகுதி -4, தமிழ்வளர்ச்சிக் கழகம், சென்னை, முதற்பதிப்பு, 1956, ப.477
4. சமூகவியல்,தமிழ்நாட்டுப் பாடநூல் கழகம், சென்னை, மறுபதிப்பு,2011,ப.2.
5. தமிழ்நாட்டுப் பாடநூல் கழகம், ப.1
6. வெ.சாமிநாதசர்மா, சமுதாயச்சிற்பிகள், தமிழ்நிலையம், சென்னை -17, முதற்பதிப்பு -2007, ப.47.
7. க.கைலாசபதி, சமூகவியலும், இலக்கியமும், குமரன் பதிப்பகம், சென்னை, மறுபதிப்பு,2009.ப.16
8. கு.தேவிப்பிரியா,புறநானூற்றில் மகட்பாற்காஞ்சி, வெற்றிமங்கை வெளியீட்டகம், சென்னை, முதற்பதிப்பு,-2001,ப.67
9. ஆ. வேலுப்பிள்ளை, தமிழ் லெக்சிகன், தொகுதி,3,ப.1300.
10. வெ.பெருமாள்சாமி, சங்க இலக்கியக்காட்சிகள் மார்க்கசிய வெளிச்சத்தில்,பாரதி புத்தகாலயம்,முதற்பதிப்பு,2010, ப.13.

11. பி.ஆர்.பரமேஸ்வரன், மார்க்சியத் தத்துவம், தாமரை வெளியீடு, சென்னை – 13, முதற்பதிப்பு 2003, ப.33.
12. பொ.வே. சோமசுந்தரனார் (உ.ஆ),குறுந்தொகை, திருநெல்வேலி தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழகம், சென்னை – 18, மறுபதிப்பு -2008, ப. 16.
13. அ.குழந்தைசாமி (பதி.), மனிதஉரிமைகளும் தமிழ் இலக்கியமும், தூயவளனார் தன்னாட்சிக் கல்லூரி, திருச்சி, மறுபதிப்பு,2011,ப.32)
14. நா.மு வேங்கடசாமி நாட்டார்.(உ.ஆ), அகநானூறு, திருநெல்வேலி தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழகம், சென்னை – 18, மறுபதிப்பு -2008, ப.56.
15. (பிளினி,வி.எஸ்.வி. இராகவன்,ப.155)
16. சு.துரைசாமிப்பிள்ளை., புறநானூறு, திருநெல்வேலி தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழகம், சென்னை – 18, மறுபதிப்பு -2008, ப.73.
17. பொ.வே.சோமசுந்தரனார்(உ.ஆ), பரிபாடல், திருநெல்வேலி தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழகம், சென்னை–18, மறுபதிப்பு -2008,ப. 84.
18. ந.கதிரைவேற்பிள்ளை, தமிழ் மொழி அகராதி,ப.857.
19. வெ. பெருமாள் சாமி, சங்க இலக்கியக் காட்சிகள்,ப.61
20. சு.துரைசாமிப்பிள்ளை (உ.ஆ), புறநானூறு, ப.140.
21. மேலது., ப.144.
22. மேலது., ப.156.
23. மேலது., ப.163.
24. ஞா. மாணிக்கவாசகன் (உ.ஆ), பத்துப்பாட்டு, உமாபதிப்பகம், சென்னை, ஐந்தாம் பதிப்பு -2006, ப.158.
25. சு.துரைசாமிப்பிள்ளை (உ.ஆ), புறநானூறு, ப.169.
26. மேலது.ப. 172.